Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 332

செவ்வாய்க்கிழமை 24 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 07 ஆம் நாள் –

## அமைச்சரவை மாற்றம்; பெரமுன - ரணில் முரண்

கொழும்பு, ஒக். 24
தமது கட்சி உறுப்பினர்களுக்கு அல்லாமல் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளமைக்கு பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. »10



# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்!

### சுகாதாரத்துறை அமைச்சை பறிகொடுத்தார் கெஹலிய

கொழும்பு, ஒக்ரோபர் 24

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் நம்பிக்கையில்லாப் பிரேரணைமூலம் இலக்கு வைக்கப்பட்ட கெஹலிய ரம்புக்வெலவிடமிருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டுள்ளது. எனினும், சுற்றாடல் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டு அவர் அமைச்சரவையில் தொடர்ந்தும் தக்கவைக்கப்பட்டுள்ளார். »11

## கண்கட்டி வித்தையே! அமைச்சரவை மாற்றம்

பீரிஸ் காட்டம்



கொழும்பு, ஒக். 24
“மக்களின் எதிர்ப்பைத் திசைதிருப்பவே சுகாதார அமைச்சின் பதவியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்த கண்கட்டி வித்தைக்கு மக்கள் ஏமாறக் கூடாது. இந்த »11

## அமைச்சரவை மறுசீரமைப்பு ஜனாதிபதி ரணிலின் நாடகம்

சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 24
அமைச்சரவை மறுசீரமைப்பை கடுமையாக விமர்சித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது வேடிக்கைத்தனமான அதிகார அரசியலின் புதிய நாடகத்தை ஜனாதிபதி தலைமையிலான அரசு அரங்கேற்றியுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். »11



## காணியை விடுவிக்குமாறு மாந்தை கிழக்கில் போர்!

முல்லைத்தீவு, ஒக். 24
முல்லைத்தீவு - வன்னிவிளாங்குளம் பகுதியில் இதுவரை விடுவிக்கப்படாதுள்ள காணிகளை உடன் விடுவிக்குமாறு வலியுறுத்தி மக்கள் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »11

## சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சுகவீனப் போர்!

கொழும்பு, ஒக். 24
மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நாடளாவிய ரீதியில் நேற்று சுகவீன அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »11

## கொத்தலாவலயின் சாவில் சந்தேகம்!

கொழும்பு, ஒக். 24
செலான் வங்கி மற்றும் செலிங்கோ நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநர் லலித் கொத்தலாவலயின் மரணத்தில் தமக்குச் சந்தேகம் உள்ள »11

## இளம் குடும்பம் முல்லையில் மாயம்!

பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஒக். 24
முல்லைத்தீவு, முள்ளியவளை, நீராவிப்பிட்டிப் பகுதியில் வசித்த இளம் குடும்பமொன்றைக் காணவில்லை என உறவினர்களால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. »11

போதையில் சாரத்தியம்

## இ.போ.ச. சாரதியின் அனுமதிப்பத்திரம் ரத்து

யாழ்ப்பாணம், ஒக். 24
மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய இ.போ.ச. சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. »11

## காவாலித்தனம் செய்த பிரதான நபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக பிறந்தநாள் கொண்டாடிய கும்பலின் பிரதான நபர் யாழ்ப்பாணம் மாவட்ட »11

## மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இனி மின்கட்டணங்கள் திருத்தம்

அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 24
இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அடுத்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். இதுவரை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை திருத்தப்பட்ட மின் கட்டணத்தை, இனிமேல் 3 மாதங்களுக்கு ஒருமுறை திருத்துவதற்கான பொறிமுறை »11

## பலஸ்தீன மக்களுடைய வலி உணர்ந்த தமிழர்கள்

தமிழ் ஏதிலிகள் பேரவை அறிக்கை

கொழும்பு, ஒக். 24
ஈழத்தமிழர்கள் நன்கறிந்த இனப்படுகொலை பயங்கரம் காசாவில் இடம்பெறுவதை நாங்கள் அச்சத்துடன் பார்க்கின்றோம் என்று காஸா நிலைவரம் தொடர்பில் அவுஸ்திரேலிய தமிழ் ஏதிலிகள் பேரவை தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு வெளி »11

## 24 மணிநேரத்தில் 117 குழந்தைகள் பரிதாபமாகப் பலி!

டெல்அவிவ், ஒக். 24
காஸா மீது இஸ்ரேல் நடத்திய மூர்க்கத்தனமான வான் தாக்குதல்களால், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 117 குழந்தைகள் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைச் சாரதிகளைப் பிடித்தால் பொலிஸாருக்கு ரூ.5,000 'போனஸ்'

## நடைமுறைக்கு வரவுள்ள புதிய திட்டம்

கொழும்பு, ஒக்.24
மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைதுசெய்யும் ஒவ்வொரு பொலிஸாருக்கும் 5 ஆயிரம் ரூபாவை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை செயற்படுத்தப்படவுள்ளது. இந்தக் காலப் பகுதிக்குள் மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரைக் கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு அவரது சம்பளத்தை விட மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துகளைத் தடுக்கவும், அதிகாரிகளை ஊக்குவிக்கவும் இந்த முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார். (எ-இ)

## சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்., ஒக்.24
யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.
பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் 'அர்த்த நாரீஸ்வரர் வடிவம் உணர்த்தும் வாழ்வியல்'என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.
சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-இ)

## பட்ஜெட்டின் பின்னர் தேர்தலுக்கு திட்டம்

வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் அரசாங்கம் தேர்தலொன்றுக்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபடவுள்ளது என்று அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.
அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், எந்தவொரு அரசியல் கட்சியாலும்பெரும்பான்மை பெறமுடியாது. கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டும். ஜனாதிபதியிடம் சென்று புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நடத்தும் யோசனையை முன்வைத்துள்ளது. (எ-இ)

## திருமந்திர ஆன்மிக மாநாடு எதிர்வரும் 28 அன்று யாழில்

யாழ்ப்பாணம், ஒக்.24
அகில இலங்கை சைவமகாசபையும், யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறையும் இணைந்து நடத்தும் திருமந்திர ஆன்மிக மாநாடு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மாநாடு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவ சித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் "ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்துக்கு உயிர் கொடுப்போம்" என்ற தொனிப்பொருளில் மாநாடு நடைபெறவுள்ளது.
சைவத் தமிழர்களது வாழ்வியலுடன் இணைந்ததாக திருமந்திரம் காணப்படுகின்றது. திருமந்திரம் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படவேண்டும். அதை மையமாக கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் தழுவியரீதியில் மாணவர்களிடையே நிகழ்நிலை ரீதியாக திருமந்திரப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. இந்த மாநாட்டுக்காக 50 திருமந்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு, மலையகம் தழுவியரீதியில் அறநெறி மாணவர்களிடையே கொடுக்கப்பட்டுள்ளது.
அத்துடன் எதிர்வரும் வாரத்தை திருமந்திர வாரமாகவும் அகில இலங்கை சைவமகாசபை மற்றும் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த வாரத்தில் திருமூலரது திருமந்திரத்தை அறிதல், பிறருக்குத் தெளிவூட்டுதல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.
மாநாட்டில் திருமந்திர மாநாட்டு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.
நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமயப் பெரியார்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-125)

## பாக்கு நீரிணையைக் கடந்து மாணவர்கள் மூவர் சாதனை

மன்னார், ஒக்.24
தலைமன்னார் - ராமேஸ்வரம் இடையில் உள்ள பாக்கு நீரிணையை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளனர். இந்த முயற்சிக்கான அனுசரணையை மன்னார் ரோட்டரிக் கழகம் வழங்கியது.
கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நீச்சல் குழுவினர் தனுஷ்கோடி கரைக்குச் சென்று நேற்று முன்தினம் காலை 3 மணியளவில் நீச்சலை ஆரம்பித்து மதியம் ஒரு மணியளவில் தலைமன்னார் கரையை வந்தடைந்தனர்.
இந்தச் சாதனை நிகழ்வில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி சாரணர்களின் 150 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது.
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும், 15 வயதுக்குட்பட்ட ஒரு மாணவருமே சாதனை படைத்துள்ளனர். அவர்களுக்கான சான்றிதழ்களை சோழன் ஆசிய சாதனை அமைப்பு வழங்கியிருந்தது. (எ-213)

## சிறுவர்களுக்கான இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக்.24
'எண்ணித் துணிக' அமைப்பால் முன்னெடுக்கப்படும் சிறுவர்களுக்கான (வயது 10-18) இலவச வகுப்புகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏ-32 வீதி, மடத்தடி, கைதடியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இந்த வகுப்புகளில் ஜே/295, ஜே/296, ஜே/297, ஜே/298, ஜே/299 ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் வசிக்கும் சைவத் தமிழ் மாணவர்கள் மட்டுமே கலந்துகொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
12 திருமுறைகள் முற்றோதல், பெரிய புராணம் பூரண விளக்கத்துடன் கற்றல், பெண் பிள்ளைகளுக்குத் திருவாசகம் முற்றோதல், 63 அடியார்கள் 9 தொகை அடியார்கள் மொத்தம் 72 அடியார்கள் அனைவரினதும் வரலாறுகள் பற்றி அறிதல், இலங்கை அடியார்கள் விபரம் தொகுத்தல் மற்றும் வரலாறுகள் பற்றி அறிதல் போன்ற ஆன்மிக வகுப்புகளும் உடுக்கு வாசித்தல், மிருதங்கம் வாசித்தல், சிங்கிச்சா மேளம் வாசித்தல், தபேலா வாசித்தல், டொங்கட் வாசித்தல், தப்பு அடித்தல் (பறை) போன்ற கலை வகுப்புகளும் சதுரங்கம், பேச்சு ஆங்கிலம், பேச்சுச் சிங்களம், சங்கீதம், சித்திரம் போன்ற பொதுக் கல்வி தொடர்பான வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.
ஆர்வமுள்ள சிறுவர்கள் 0774574565 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முன்பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-159)

## தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாளில் குழப்பம்

### பெற்றோர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.24
அண்மையில் நிறைவடைந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் பல சிக்கல்கள் காணப்பட்டன என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
இதனால் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர்.
பாதிப்புக்குள்ளான மாணவர்களின் பெற்றோர் அமைப்பால் கண்டியில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தீர்வு வழங்கும் வகையில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்படவேண்டும் எனவும் பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர். (எ-இ)

## நவராத்திரி வழிபாடுகள்

யாழ்., ஒக்.24
திருநெல்வேலி கரியப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.
விஜயதசமியான இன்று ஆலயத்தில் காலை 9 மணிக்கு கன்னி வாழை வெட்டும் ஏடு தொடக்குதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## விஜயதசமி விழாவும் பரிசளிப்பும்

யாழ்., ஒக்.24
நீர்வேலி றோ.க.த. க. பாடசாலை இந்து மாமன்றத்தின் விஜயதசமி விழாவும் சைவநெறிப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டத்தில் நடைபெறவுள்ளது.
இந்துமாமன்றத் தலைவர் செல்வி கு.லினோஷாதலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகஅகிலஇலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர், பண்டிதர் செ. த. குமரனும் சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவர் து. தயாபரனும் கலந்துகொள்ளவுள்ளனர். சைவப்புலவர், பண்டிதர் செ.த.குமரன் "நவராத்திரி உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்கள்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படையைப் பார்த்து கற்கவேண்டுமாம் ஐ.நா. சபை!

## விஜிதமுனி சொய்சா கூறுகின்றார்

**கொழும்பு, ஒக்.24**

**போர்க்காலத்தில் வடக்கு மக்களுக்காக இலங்கை இராணுவமும், அரசும் செய்ததை முன்னுதாரணமாகக்கொண்டு காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர்க்காலத்தில் வடக்கு மக்களுக்கு உணவு கிடைப்பதற்கு இராணுவம் தடையாக இருக்கவில்லை. மக்களுக்கு உணவு விநியோகித்துக் கொண்டுதான் போரும் செய்யப்பட்டது. இவ்வாறு மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்துக்கு எதிராக ஜெனிவாவில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது கவலையளிக்கின்றது.

இஸ்ரேல் - பலஸ்தீனப் போரை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும். காஸா பகுதியில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைய வேண்டும். அதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் ஐ.நா. தவறியுள்ளது.

போர்க்காலத்தில் எப்படிச் செயற்படவேண்டும் என்பது தொடர்பில் சிறந்த முன்னுதாரணத்தை வழங்கிய நாடுதான் இலங்கை. வடக்கில் 4 இலட்சம் மக்களுக்கு மாதாந்தம் உணவு அனுப்புவோம். மக்களுக்கு உணவு வழங்கிக் கொண்டுதான் போர் செய்தோம். மனிதாபிமான உதவிகளும் வழங்கப்பட்டன. பயங்கரவாதிகளால் பணயக்கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த மக்களையும் மீட்டோம். அதற்காக இராணுவத்துக்கு நன்றிகூற வேண்டும்.

இப்படியான இராணுவத்துக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணைகள் கொண்டுவரப்படுவது கவலையளிக்கின்றது. இலங்கை செயற்பட்டதுபோல காஸா பகுதியில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-44)

# மக்களை அடக்கி வைத்து தேர்தலை நடத்த முயற்சி

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.24

மக்களை அடக்கி, சமூக வலைத்தளங்களை ஒடுக்கி, பணபலத்தைத் திரட்டியே தற்போதைய அரசு தேர்தலுக்குத் தயாராகின்றது. ஆனால் மாபெரும் சக்தியாக கருதப்படுகின்ற மக்கள் சக்தி எங்கள் பக்கமே உள்ளது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் அடுத்தவருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அடுத்த வருடம் தேர்தலைக் கட்டாயம் நடத்தியாகவேண்டும். இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசு பணபலத்தைத் திரட்டிவருகின்றது. மறுபுறத்தில் சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட வரைவுகளைக் கொண்டுவந்து தேர்தலுக்குத் தயாராகின்றனர். அடுத்து மக்கள் வீதிக்கு இறங்கினால் அது தேர்தலில் பின்னடைவாக அமையும். அதைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய பயங்கரவாத தடைச் சட்டவரைவை முன்வைத்து, தேர்தலுக்குத் தயாராகின்றனர். அதன்மூலம் மக்களை ஒடுக்குவதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது. அவர்களுக்கு ஊடக பலமும் உள்ளது. அரச பலமும் உள்ளது . தேர்தல் வெற்றிக்கு அவற்றை நிச்சயம் பயன்படுத்துவார்கள், ஆனால் இவற்றை எல்லாம்விட மேலான மக்கள் பலம் எம்மிடம் உள்ளது - என்றார். (எ-44)

# மது விற்பனைக்குத் தடை நீக்கம்

உல்லாசப் பயண விடுதிகளிலும் உணவகங்களிலும் செறிவு குறைந்த மதுபான விற்பனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

உல்லாசப்பயண விடுதிகளிலும் உணவகங்களிலும் செறிவு குறைந்த மதுபான விற்பனையைத் தடை செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்து நீதிமன்று தடை விதித்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்தத் தடைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதையடுத்து தடையை நீதிமன்று நீக்கியுள்ளது. (எ-6)

# ‘மலையகம் 200’க்கு தமிழகத்தில் தடை

கொழும்பு, ஒக்.24

தமிழ் நாட்டில் மலையகம் 200 கருத்தரங்கை நடத்துவதற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது.

இந்த மாதம் பதினைந்தாம் திகதி இந்தக் கருத்தரங்கை நடத்துவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. தமிழக அரசின் தடை காரணமாகக் கருத்தரங்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடானது தமிழர்களின் கருத்துச்சுதந்திரத்தையும், ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் தடுக்கும் நடவடிக்கை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கை சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்தப்படும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செனட் சபை உறுப்பினரான பேராசிரியை சரஸ்வதியும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழக உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். (எ-6)

# சமூகப் பிரச்சினைகள்; தீர்வுகளுக்குப் பயிற்சி

மன்னார், ஒக். 24

தேசிய சமாதானப்பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி மையம் ஆகியவை இணைந்து நடத்திய மன்னார் பிரதேச சர்வ சமயக் குழுவின், மாதாந்தக் கூட்டமும் ஒன்றுகூடலும் மன்னார், கீரியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தொடர்பாடலுக்கான பயிற்சி மையமும் தேசிய சமாதானப்பேரவைக்குமான செயற்றிட்ட மன்னார் மாவட்டத்துக்கான இணைப்பாளர் [illegible] தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதினம் தெரியுமோ?

போராட்டங்களில துடக்குப் பாக்கிற ஆக்களை இந்தமுறை ஹர்த்தால் காட்டிக்குடுத்தது. அவையைப் பற்றித்தான் இண்டைக்கு பட்சி சொல்லப்போகுது. ஏழு கட்சியள் சேர்ந்துதான் இந்தமுறை ஹர்த்தாலுக்கு அழைப்பு விட்டவை. வழக்கம் மாதிரி முன்னணி இந்தக் கூட்டுக்குள்ள இல்லை. ஆனால், தமிழரசுக் கட்சி இருக்குது. மனிதச்சங்கிலிப் போராட்டம் பற்றி கதைக்கேக்கையும், ஹர்த்தால் வைக்கிறதைப் பற்றி முதலில கூடேக்கையும் தமிழரசுக் கட்சியின்ர முக்கியமான தலையள் கூட்டங்களுக்குப் போனவை. ஆனால் பிறகென்னவோ உள்ளுக்க நடந்திருக்க வேணும். மெல்ல மெல்ல ஒவ்வொருத்தரா 'எஸ்கேப்' ஆகிட்டினம். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவையர் கூட, இந்தக் கூட்டங்களுக்குத் தான் போகாமல் தன்ர மகனைத்தான் அனுப்பினவர். இப்பிடி மாவையர் தனக்குப் பதிலா(தமிழரசுக் கட்சியின்ர தலைவருக்குப் பதிலா) மகனை அனுப்பிறது பிழை எண்டு பட்சி முதலே சொல்லியிருந்தது. அந்தக் கட்சியின்ர பேச்சாளர் சுமந்திரனும் 'அப்பிடி மாவைக்குப் பதிலா மகன் போகேலாது. அவர் எங்கட கட்சியின்ர சார்பில முடிவெடுக்க ஏலாது. அதால இந்தக் ஹர்த்தால் பற்றின கூட்டங்களுக்கு தமிழரசுக் கட்சி போகேல எண்ட முடிவுக்குத்தான் வரவேணும்' எண்டு பேட்டி குடுத்தவர்.

இந்த விசயத்தால கட்சிக்குள்ள கடும் புகைச்சல். ஏற்கனவே ஏழெட்டுக் குரூப்பா பிரிஞ்சு கிடந்த கட்சிக்குள்ள, ஹர்த்தால் விசயம் இன்னொரு பக்கத்தால நெருப்பை மூட்டிவிட, ஆளுக்குஆள் காலைவாருற வேலையப் பாக்கத் தொடங்கிட்டினம். இந்த ஏழு கட்சிக் கூட்டில, தமிழரசுக் கட்சியை ஒரு டம்மிப் பீஸ் மாதிரித் தான் மற்றக் கட்சியள் நடத்தினவை. அதுவும் தமிழரசுக் கட்சிக்காரருக்கு பெரிசாப் பிடிப்பில்லை. எல்லாத்தையும் சேர்த்து வைச்சு, இந்தமுறை ஹர்த்தாலை குழப்பிறதுக்கு சிலர் முடிவு செய்திருக்கினம். தங்கட சப்போர்ட்டர்ஸூக்கு ஹர்த்தாலுக்கு எதிரா வேலை செய்யச் சொல்லி ஓர்டர் போட்டிட்டு இவை நல்ல பிள்ளையள் மாதிரி இருந்திட்டினம். இவை குடுத்த கயித்தை விழுங்கின ஆதரவாளர்களும் பேஸ்புக்கில இரவுபகலா ஹர்த்தாலுக்கு எதிராக் கம்பு சுத்த வெளிக்கிட்டிச்சினம். அதோட தங்களுக்குத் தெரிஞ்ச கடைக்காரருக்கும் அவையள் போன் பண்ணி, 'இந்தமுறை கடையளை நீங்கள் திறவுங்கோ. ஒருத்தரும் ஒண்டும் சொல்லாயினம்' எண்டு தூண்டியும் விட்டவையாம். இந்த விளையாட்டுகள் ஏழுகட்சிக் கூட்டணிக்காரருக்கும் தெரிய வந்ததாலதான், 'ஹர்த்தாலைக் குழப்ப உள்ளுக்க இருந்தே சதி செய்யினம்' எண்டு சிறீகாந்தா அறிக்கையெல்லாம் விட்டவர்.

இந்தமுறை ஹர்த்தாலில பதுங்கின இன்னொரு குரூப், கம்பஸ் பெடியள்தான். வழக்கமா எல்லாப் போராட்டங்களுக்கும் கேட்டுக் கேள்வியில்லாமல் ஆதரவு குடுத்து, அறிக்கையெல்லாம் விட்டுக் களமாடுற கம்பஸ் பெடியள், இந்தமுறை ஹர்த்தால் பற்றி மூச்சுக்கூட விடேலை. ஹர்த்தாலுக்கு ஆதரவா அறிக்கையாவது விடுவம் எண்டு, மாணவர் ஒன்றியத்திட்ட கம்பஸ் பெடியள் கேட்டிருக்கினம். அதுக்கு ஒன்றியத் தலைவர் சம்மதிக்கேலையாம். 'இந்தமுறை ஹர்த்தால் அறிவிச்சது ஏழு கட்சியள். ஹர்த்தாலுக்கு ஆதரவளிச்சால் அது கட்சிச் சார்பாப் போடும்' எண்டு 'வியாக்கியானம்' குடுத்திருக்கிறார் மாணவர் ஒன்றியத்தலைவர். இவ்வளவு நாளும் கட்சியள் தனித்தனியா அறிவிச்ச போராட்டங்களுக்குக்கூட ஆதரவு குடுத்த, கம்பஸ் மாணவர் ஒன்றியம் இந்தமுறை இல்லாத பொல்லாத சாட்டுச் சொல்லி ஒதுங்கிட்டுது. புலனாய்வு மட்டங்களில இருந்தும், எம்பஸியளில இருந்தும் அவைக்கு ஓர்டர் போனதாலதான், மாணவர் ஒன்றியம் இந்தமுறை ஹர்த்தாலுக்கு சப்போர்ட் பண்ணேலை எண்டும் உள்ளுக்க இருந்து ஒரு கதை வந்திருக்குது. செத்தவீட்டில துடக்கு பார்க்கலாம் போராட்டங்களிலயும் துடக்கு பார்க்கலாமோ?



-பட்சி

padsi@uthayan.com

# உதயனின் பரிசுக்குவியல்

பங்களாதேஷ் - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (24.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

தினம் ஒரு பரிசு 20

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.







# பாகிஸ்தான் படுதோல்வி!



**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானை எந்தச் சமரசமும் இல்லாமல் தோற்கடித்தது ஆப்கானிஸ்தான்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் பாபர் 74 ஓட்டங்களையும், சபிக் 58 ஓட்டங்களையும், சடப் கான் 40 ஓட்டங்களையும், இப்திகார் அஹமட் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நூர் அஹமட் 3 விக்கெட்டுகளையும், நவீன் உல் ஹக் 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

சென்னை - சேப்பாக்கம் ஆடுகளத்தில் 260 ஓட்டங்களே வெற்றிபெறச் சாத்தியமான இலக்காதலால், இந்த ஆட்டத்தில் பாகிஸ்தானே வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்பே இருந்தது. ஆனால், ஆப்கானிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்கள் குர்பாஸ், சடான் இருவரும் மிகச்சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கி அணியைப் பலப்படுத்தினார்கள். பாகிஸ்தான் அணியைத் தோற்கடிக்கக்கூடிய அத்திபாரத்தை ஆப்கானின் ஆரம்ப வீரர்களே அமைத்துக்கொடுத்தனர். அணி 130 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குர்பாஸ். சடான் 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த விக்கெட் சாய்க்கப்பட்டபோது ஆப்கானிஸ்தான் வெற்றிக்கு அருகில் சென்றிருந்தது. ரஹ்மட் ஷா, சகிடி இருவரும் மற்றொரு வலுவான இணைப்பாட்டத்தை வழங்க ஒரு ஓவர் மீதமிருக்கையில் வென்றது ஆப்கான். ரஹ்மட் ஷா 77 ஓட்டங்களுடனும், சகிடி 48 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர். (ம)

## இன்றைய ஆட்டம்

பங்களாதேஷ் - தென்னாபிரிக்கா

இடம் : வான்கடே
நேரம்: பி.ப. 2.00

## தினம் ஒரு பரிசு நாள் 18 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஶ்ரீ.சியாமளா | - கொக்குவில் கிழக்கு | ச.வசந்தகுமார் | - நெடுங்கேணி |
| கி.கி.சோர்த்மன் | - வட்டக்கச்சி | பி.கார்த்திகேசு | - பண்டாரிகுளம் |
| ஆர்.பிரியங்கராஜ் | - கோண்டாவில் | சி.துரைராயா | - நெளுக்குளம் |
| சு.வாகீசன் | - தவசிகுளம் | எஸ்.சந்தோஸ் | - ஊரெழு |
| எம்.கோசயன் | - மட்டுவில் வடக்கு | பி.பிரதீஸ் | - சில்லாலை |
| வாசுகி நந்தகுமார் | - அச்சுவேலி | வ.வதனா | - துன்னாலை |
| ந.அபிப்பிரியன் | - இந்தியா | கே.கம்சாயினி | - கட்டுடை |
| ச.சேயோன் | - இணுவில் கிழக்கு | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# டயானாவும் கில்டாவும்...!

'உஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்....!'

இத்தாலியின் நாடாளுமன்றத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒலித்த இந்தக் குரல் உலகின் ஒட்டுமொத்தக் கவனத்தையும் ஓரிரவில் வென்றது. உலகம் திரும்பிப்பார்த்த சம்பவமாக அது அமைந்தது. என்னதான் அப்படி நடந்தது? பெரிதாக ஒன்றுமேயில்லை. இத்தாலியின் நாடாளுமன்ற உறுப்பினர் கில்டா, தன் பச்சிளம் குழந்தையுடன் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டார். அவர் நாடாளுமன்ற விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டிருந்தபோது குழந்தை திடீரென அழத்தொடங்கியது. ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பாகுபாடில்லாமல் நாடாளுமன்றம் அமைதியானது. கொஞ்சம்கூட சிந்திக்காமல் தன் குழந்தைக்குப் பாலூட்டி அதை ஆசுவாசப்படுத்தினார் கில்டா. அவ்வளவே.

ஆனால், ஒலிம்பிக்கில் தங்கம் பெறப்பட்டதைப்போல, அரிதிலும் அரிதான ஏதோவொரு அற்புதம் நிகழ்ந்துவிட்டதைப்போல நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'மெல்லக் கரவொலி எழுப்பி' கில்டாவை வரவேற்றனர் – தட்டிக்கொடுத்தனர். குழந்தை அமைதியானதும் சபாநாயகர் ஜோர்ஜியோ, 'சத்தமில்லாமல் உரையாடும்படி' சபையை அறிவுறுத்தியதுடன், கில்டாவையும் அவர் பச்சிளம் குழந்தையையும் வாழ்த்தினார். மேற்கத்தேய தேசங்கள் தாய்மையில் இருந்து தொலைவாகச் சென்றுகொண்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளைப் பொய்யாக்கும் வகையில், குப்பையுள் குன்றுமணியாக அன்று உயர்ந்து நின்றார் கில்டா. அந்த உயர்வு கில்டாவுக்கு மட்டும் உரித்தானதல்ல, இத்தாலிய நாடாளுமன்றத்துக்கும்தான்.

இலங்கை நாடாளுமன்றமும் கடந்தவாரம் 'பெண்மையை' மையப்படுத்திய விவாதங்களில் – வாக்குவாதங்களில் தாராளமாகவே ஈடுபட்டிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவின் காற்சட்டையைக் கழற்றுவேன் என்று எச்சரித்திருக்கின்றார் டயானா கமகே. இதைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் தான் தாக்கப்பட்டேன் என்று டயானாவும், 'டயானாவே எம்மைத் தாக்கவந்தார். அவர் ஒரு கழிவு பவுசர். அந்த பவுசரால் எங்களுக்குப் பாதுகாப்பில்லை' என்று ஐக்கிய மக்கள் சக்தியினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர். இதை வாசிக்கும்போது, நாற்றம் நிறைந்த சேற்றுக்குள் பன்றிகள் கட்டியணைத்து உருள்வதுபோன்று உங்கள் கற்பனையில் ஒரு சித்திரம் தோன்றினால் அந்தச் சிந்தனையில் தப்பில்லை எனக்கொள்க.


இலங்கையில் கஞ்சாவைச் சட்டபூர்வமாக்கவேண்டும், இரவுக் களியாட்ட விடுதிகள் இலங்கைக்குள் அதிகம் திறக்கப்படவேண்டும், கடற்கரைகள் இரவுக் களியாட்டங்களுக்காகத் திறக்கப்படவேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை – மேற்கத்தேய 'ஒழுக்கப் பிறழ்வுக்கே' சவால் விடும் விதமாக அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாக முன்வைத்து வந்தார் டயானா. கஞ்சா பயிரிடுவதை இலங்கை இன்று உரிய வரைமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பாற்பட்டுச் சட்டபூர்வமாக்கப் பரிசீலிக்கின்றது என்றால் அதற்கு டயானாவின் நாடாளுமன்ற உரைகளும், ஓர் இராஜாங்க அமைச்சராக அவர் மேற்கொண்ட முன்னெடுப்புகளும் பிரதான காரணமானவை. ஆதலால், நாட்டின் மக்கள் மத்தியிலும் எதிர்க்கட்சியினர் மத்தியிலும் டயானாவுக்கு எதிராக 'ஓர் அறச்சீற்றம்' இருக்கவே செய்கின்றது. ஆனால் டயானா மக்கள் பிரதிநிதி. அதனால் அவர் செய்யும் எல்லாக் கூத்து களையும் சகிக்கவேண்டிய விதியை இலங்கை மக்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

இதேவேளை – இராஜாங்க அமைச்சர் டயானாவும் பல இடங்களில் தன் 'அதிகார வரையறையை' அறிந்து அதைத் தன் சொல்லிலும் செயலிலும் கடைப்பிடிக்கவேண்டும். எந்தவொரு தூண்டலுக்கும் துலங்கல் வெளிப்படவே செய்யும். அழகற்ற – அதிகார மெத்தனம் கூடிய எம் உடல் மொழியானது, நாம் கூறும் கருத்துச் சரியாகவே இருந்தாலும் பார்ப்பவருக்கு அதைத் தவறாகக் காண்பிக்கும். டயானா விடயத்திலும் இதுவே நடந்தது – நடந்துகொண்டிருக்கின்றது. இனவாதச் சகதி பெருக்கெடுத்தோடும் இலங்கை நாடாளுமன்றில், இப்போது வெளிப்பட்டிருக்கும் பால்நிலை மோதல் சார்ந்த அருவருப்புகள் ஒட்டுமொத்தத் தீவுக்கும் இன்னொரு தலைகுனிவே. இதில் எவரிடம் சரி, எவரிடம் தவறு என்பதெல்லாம் மறுகதை.

## நாளொரு நல்வார்த்தை

வாட்டி வதைத்தாலும்
கடுமையாகப் பாடுபட்டால் தான்
பிரச்சினைகளோடு
போராடித் தீர்வு காணமுடியும்.

- அப்துல்கலாம் -




# இலங்கையை இராணுவத்தளமாக மாற்றுவதற்கு முயற்சிக்கும் சீனா!

## பென்டகன் அறிக்கை

கொழும்பு, ஒக்.24

இலங்கையை இராணுவத் தளபாட விநியோகத்துக்காகப் பயன்படுத்துவது தொடர்பாக சீனா ஆராய்ந்துள்ளது என பென்டகன் தெரிவித்துள்ளது.

சீனா தனது உலகளாவிய இராணுவத் தளங்களை விஸ்தரிக்க முயற்சிக்கின்றது எனத் தெரிவித்துள்ள பென்டகன், சீனா தனது இராணுவத் தளபாட விநியோகத்துக்காக 18 நாடுகள் மீது கவனம் செலுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளுக்கான தேவை எழும்போது தனது இராணுவம் பயன்படுத்தக் கூடிய தளங்களை உருவாக்குவது தொடர்பாகவே சீனா கவனம் செலுத்துகின்றது.

சீனா இராணுவத்தளபாட விநியோகத்துக்கான தளங்களை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயும் நாடுகளில் நான்கு நாடுகள் இந்தியாவின் நெருங்கிய அயல்நாடுகளாகும். பங்களாதேஷ், இலங்கை, மியான்மர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளே அவை என பென்டகன் தெரிவித்துள்ளது.

ஏனையவை தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய மூன்று தென்கிழக்காசிய நாடுகளாகும்.

தொலைதூரங்களில் தனது இராணுவ வலிமையை வெளிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் சீனா தனது வெளிநாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விநியோக வசதிகளை விஸ்தரிக்க முயல்கின்றது எனத் தெரிவித்துள்ள பென்டகன், சீனாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளைக் குழப்பலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

# சர்வதேச நியமங்களின்படி பயங்கரவாதச் சட்டம் வேண்டும்

## சம்பிக்க வலியுறுத்து



கொழும்பு, ஒக்.24

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நவீன மயப்படுத்தப்பட்ட புதிய பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்று குடியரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொண்ட நாடாகும். போரால் நாட்டில் ஒரு சதவீதமானோர் கொல்லப்பட்டனர். 10 வீதமானோர் நாட்டைவிட்டு வெளியேறினர். எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டமொன்று அவசியம். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டவரைவில் மக்களை ஒடுக்குவதற்கான சந்தர்ப்பம் அதிகம். அதனை நாம் முற்றாக எதிர்க்கிறோம். நவீன மயப்படுத்தப்பட்ட சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைவான பயங்கரவாதத் தடுப்புச் சட்டமொன்றே கொண்டு வர வேண்டும் - என்றார். (ச-44)

**நாளை** 25.10.2023

புதன்கிழமை
ஐப்பசி 08


சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக"

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.10.2023 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
### நாகலிங்கம் வரதராஜா

அவர்களின் வீட்டுக்கிரியைகள் 25.10.2023 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று**
**வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இல.20, 2ஆம் ஒழுங்கை,**
**சங்கத்தானை, டச்சு றோட்,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**077 085 6058**
**077 077 9745**

(CS52601) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 04 . 1972



இறப்பு
19 . 10 . 2023

### குலவீரசிங்கம் குலராஜன் (நிறஞ்சன்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டி வேவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் குலராஜன் (நிறஞ்சன்) அவர்கள் கடந்த (19.10.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம் பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், குலராஜன், சுகிர்தா அவர்களின் அன்புக் கணவரும், சியாநீதன், யதுரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறஞ்சனா, நிசந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.10.2023) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை களுக்காக பூதவுடல் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சுதுமலை.
**077 860 5675**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 52589) A-1

# மரண அறிவித்தல்

## திருமதி நித்தியானந்தன் பூபதி

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தன் பூபதி கடந்த (21.10.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நித்தியானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தி (லண்டன்), ஜெயந்தி (கனடா), தர்சினி (கனடா), நந்தினி (கனடா), யாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமாரன் (லண்டன்), ராங்கன் (ரகு-கனடா), சிவகுமார் (கனடா), இந்திரகுமார் (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கீதா (லண்டன்), சுஜித்தா (உரும்பிராய்), Dr.வைகுந்தன் (அவுஸ் ரேலியா), பிரபாகரன் (கனடா), சுதாகரன் (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், ஜெயசீலன் (லண்டன்), ரோகன்ராஜ் (உரும்பிராய்), Dr.நிவேதா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.சர்மிகா, Dr.நிவேக்கா, Dr.சஹானா, தக்ஷனா, றொஜேனா, லக்ஷகா, சரவணா, லாவண்யா, சரண்யா, சௌமியா, இந்துஜா, கோபிகன், அபிநயா, கிசாந், பிரவீந், நிஷாந், கேஷனி, சௌமினி, டனஹறிஷ், ஷாக்ஷ ஹறிணி, நிகரியா, மிதுன், தீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அவ்வியா, ரோமன், நிலன், ஈதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பாலசிங்கம், பகவதி, இராசலிங்கம், காலஞ்சென்றவர்க ளான மகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான கோபாலகிருஷ்ணன், பாக்கிய லட்சுமி, செல்வராணி, விவேகானந்தன், வைரமுத்து, சச்சிஆனந்தன் ஆகியோரின் மைத்துனியும், சிவரூபன், மயூரன், ஜெனகன், ஜெனனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



**தோற்றம்**
**17.03.1933**

**மறைவு**
**21.10.2023**

**நாகலிங்கம் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(cs. 52607) (N-1)

**தகவல்: குடும்பத்தினர்**
Dr. வைகுந்தன் - 077 514 5205
ரோகன்ராஜ் - 077 175 8485

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கேதார கௌரி விரதம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் கேதார கௌரி விரத விசேட பூஜைகள் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின்றன. இதைத் தொடர்ந்து தினமும் மாலை 5 மணிக்கு பூஜைகள் இடம்பெறவுள்ளன. நவம்பர்மாதம்13ஆம்திகதிதிங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு கேதார கௌரி விரத காப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (ம)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.07.1968

மறைவு 18.10.2018

### அமரர் பொன்னம்பலம் கஜேந்திரன்

(கிளை முகாமையாளர் - ப்.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு)

திதி: வளர்பிறை தசமி (24.10.2023)

ஆண்டுகள் பல கடந்து சென்றாலும்


உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

அன்பு மனைவி
க.கிருஷ்ணபவானி

பூதன் வயல் சந்தி,
குமாரபுரம்.

(cs 26697) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 • 11 • 1990

மறைவு 05 • 11 • 2022

### சிவபாலன் சிவரூபன் (றூபன்)

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உன் நினைவு...
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோமடா...
உன்னை நினைக்காத நொடிகளில்லையடா

அன்னாரின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு 25.10.2023 புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலம், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திர கோவிலடி,
உடுப்பிட்டி.
077 123 6319

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.40825) (N.1)

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

## NCDB

## Northern Co-operative Development Bank

## பதவி வெற்றிடம்

1. நிதி உத்தியோகத்தர் ( Finance Officer)
   - பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: கணக்கியல்/ முகாமைத்துவத் துறை.
   - குறைந்த பட்சம் 3 வருடம் நிதி / கணக்கியல் பிரிவில் வேலை செய்த அனுபவம்.
   - தொழில்சார் தகைமை (CA/CMA/CIMA/CPA) மேலதிக தகைமையாக கொள்ளப்படும்
   - கணக்காய்வு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல்
2. ஆய்வு உத்தியோகத்தர் ( Research Officer)
   - துறை சார்ந்த பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை:
   - ஆய்வுத்துறையில் குறைந்தது 3 வருட அனுபவம் கொண்டிருத்தல்
   - தேவையேற்படின் எந்த இடத்திற்கும் களப்பயணம் செய்யும் ஆற்றல் கொண்டிருத்தல்
   - ஆய்வு மற்றும் பகுப்பாய்வு திறன் கொண்டிருத்தல்
   - குழுவாக இணைந்து வேலை செய்யும் திறன் (Team Work Skills)

**பொதுவான தகைமைகள்**

- Ms Office மென்பொருளை கையாளும் திறன்
- கூட்டுறவுத் துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை
- தகவல் தொடர்பாடல் திறன் கொண்டிருத்தல்

பொருத்தமான விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவி நிலைக்கான விண்ணப்பபடிவத்தை பெற்று கார்த்திகை 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

- விண்ணப்ப முடிவுத் திகதி : 15.11.2023
- **விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: தலைவர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி.**
- விண்ணப்பம் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (விண்ணப்ப படிவத்துடன் சுயவிபர கோவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்)
- சகல பதவிகளுக்குமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பதவி நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

**தலைவர்**

பதிவு இல. N/20
பதிவு திகதி 2019.08.30
முதியோர் இல்ல வளாகம்,
கண்டி வீதி, கைதடி.

CR 40827 (4x20) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 • 10 • 1935

மறைவு 23 • 10 • 2023

### திருமதி மண்டலேஸ்வரம் தங்கரத்தினம்

ஆலடி ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மண்டலேஸ்வரம் தங்கரத்தினம் அவர்கள் நேற்று (23.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மண்டலேஸ்வரத்தின் (ஓய்வுபெற்ற ஓவசியர், யாழ். வைத்தியசாலை) அன்பு மனைவியும், சுகுமாரன், சியாமளா, பிறேமளா, நிர்மலா ஆகியோரின் அன்புத் தாயாரும், நளினாதேவி, பிரதாபராஜா, கந்தசாமி, ராஜ்பவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

'...தி இல்லம்'
...லன், ஆனைக்கோட்டை.

தகவல்:
ம.சுகுமாரன் (மகன்)

(CS 52608) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயதசமி விழா

கொடிகாமம் ஒக் 24
நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை இந்து மாமன்றத்தின் விஜயதசமி விழாவும் சைவநெறிப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இந்துமாமன்றத் தலைவர் கு.லினோஷா தலைமையில் இடம்பெற வுள்ளது.


இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சைவப்புலவர் செ.த.குமரன் கலந்து கொள்ளவுள்ளதுடன், 'நவராத்திரி உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்கள்' என்னும் விடயப்பொருளில்; சொற்பொழி வும் ஆற்றவுள்ளார்.

விஜயதசமியை முன்னிட்டுத் தெல்லிப் பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி யளவில் மேற்படி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திரு முருகனால் சிறார்களுக்கு ஏடு தொடக்கி வைக்கப்படும்.

மாலை 6.30 மணியளவில் துர்க்காதேவி ஆலயத்தின் முன்பாக விசேட பூசைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து இரவு 7 மணியளவில் மானம்பூத் திருவிழா நடைபெறும். (ம-159,100,66)

## விஜயதசமி விழா வியாபாரம் சூடு!

யாழ்ப்பாணம், ஒக். 24
நவராத்திரி விரத காலப் பகுதியின் முக்கிய மான தினங்களான சரஸ்வதி பூசை, விஜ யதசமி விழாவை முன்னிட்டு திருநெல்வேலிப் பொதுச்சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்றுத் திங்கட்கிழமை பழ வகைகள், இளநீர் மற் றும் கரும்பு என்பவற்றின் வியாபாரம் சூடு பிடித்திருந்தது. (ம-66)



## குட்டிச்சுட்டி முன்பள்ளி விஜயதசமி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.24
கோண்டாவில் கிழக்கு குட்டிச் சுட்டி முன்பள் ளியின் விஜயதசமி நிகழ்வுகள் இன்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முன்பள்ளி மண்ட பத்தில் நடைபெறவுள் ளது. நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் சண் வாமதேவன் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கி வைக்கவுள்ளார். (ச-66)



"Ammanai Saran Adainthal Athika Varamperalam"
**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
**5 Chapel Road, London W13 9AE.**
**Phone: 0208 810 0835**
**Founded:10-08-1991 Charity No:1014409**
www.ammanealing.org Email:info@ammanealing.org








**Following positions are available at the Temple**
**Please send us your application to our email address info@ammanealing.org**
**REF: SKTAT / 25 / 10 / 23**

**Position 1 : Minister of Religion (Hindu religious workers with non-pastoral role)**

Candidate must be an experienced Hindu priest with 5 years' service at various Hindu Temples either in Sri Lanka or South India

**Position 2 : Priest to prepare Neivethyam (Prasadham)(Preparing Prasadham Food, Non-pastoral role)**

Candidate must have sufficient experience in performing religious rituals in accordance with Hindi traditions & experience in preparing prasadham.

**Position3: Priest garland maker and performing Abishekam and decorating Swamikal (Idols) non-pastoral role**

Candidate must have experience in performing Abishekam, making various types of garlands and decorating Idols as per tradition Wages will be paid as per British Employment regulations.

**Closing date: 20-11-2023** (cs.52593) (N.I) **ஆலய நிர்வாகம்.**

## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் இறைச்சிக்கடை, மீன்கடை பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் ஆகியனவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

01.01.2024தொடக்கம் 31.12.2024 வரையான 12 மாத காலப்பகுதிக்கு பின்வரும் குத்தகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் (தொ.பே.இல. 0242260914) பின்வரும் நிபந்தனைகளுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இ ல. | குத்தகை விபரம் | நிரந்தர கொல்களம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை, வருடாந்த குத்தகை (ரூபா.) | மீளளிப்படும் வைப்பு(ரூபா.) | கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | ஆண்டியாபுளியங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 667,500.00 | 8000.00 | 1000.00 |
| 02 | மாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 542,900.00 | 8000.00 | 1000.00 |
| 03 | சின்னச்சிப்பி குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 266,100.00 | 8000.00 | 1,000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 1,005,150.00 | 8000.00 | 1,000.00 |
| 05 | பாவற்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 715,000.00 | 8000.00 | 1,000.00 |
| 06 | செட்டிகுளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 300,240.00 | 8000.00 | 1,000.00 |
| 07 | மாங்குளம் பொதுச் சந்தை | - | 147,200.00 | 8,000.00 | 1,000.00 |
| 08 | மாங்குளம் மீன் கடை | - | 452,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 09 | செட்டிகுளம் மீன் கடை | - | 116,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 10 | அருவித்தோட்டம் சுற்றுலா மையம் | - | 17,200.00 | 5,000.00 | 1,000.00 |
| 11 | சூடுவெந்தபுலவு மீன் கடை | - | 20,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 12 | செட்டிகுளம் பொதுச்சந்தை | - | 60,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 13 | செட்டிகுளம் பொதுமலசலகூடம் | - | 6,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 14 | குருக்கள் புதுக்குளம் கடை தொகுதி | - | 27,600.00 | 8,000.00 | 1,000.00 |

1. **கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 23.10.2023 – 06.11.2023ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை**
2. **கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 07.11.2023ம் திகதி காலை 10.00 மணி வரை**
3. **கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 07.11.2023ந் திகதி காலை 10.00 மணிக்கு**
4. **07.11.2023 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.**
5. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் **கேள்வியின் பெயர், கடையின் பெயர்** என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ **உரிய நேரத்திற்கு முன்பதாக** கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
6. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமூகமளித்தல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் **07.11.2023ல் இருந்து 07 நாட்களிற்குள்** 12 மாத குத்தகையின் 1/3 பங்கு வைப்புத் தொகையைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. வருடத்தின் வழமையான போயா தினங்கள் மற்றும் வெசாக், பொசன் தினங்களில் இறைச்சி, மீன் கடைகள் மூடப்படுவதோடு அதற்காக குத்தகை கழிவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
14. இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ந்து மூடிக்காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.
15. கச்சேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கு அமைவாகவே மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்பட வேண்டும்.
16. குத்தகைக்கு எடுத்தவர் உப குத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
17. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
18. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

செயலாளர்,
பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்.
16.10.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1948



மறைவு 23 . 10 . 2023

## திருமதி ஞானாம்பிகை சிவபாதம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு. சிங்கப்பூர் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் தற்போது சயன்சென்ரர் வீதி. கரவெட்டி வடக்கு கரவெட்டியில் வசித்து வந்தவருமான திருமதி ஞானாம்பிகை சிவபாதம் நேற்று (23.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பு சிவபாதம் (பொறியியல் விரிவுரையாளர், School of Agriculture, கண்டி, Regional / District Training Center, Karadiyanaru) அவர்களின் அன்பு மனைவியும், வீ. சிதம்பரப்பிள்ளை (VC வாத்தியார்) பார்வதி, (மயிலவாசா, கரவெட்டி) தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கந்தப்பு (இலங்கை வங்கி முகாமையாளர்) காலம்சென்ற பாக்கியம் அவர்களின் மருமகளும், வாகீசன், வசுமதி ஆகியோரின் தாயாரும், கணேந்திரன், நிர்மலாவின் மாமியும், Dr. ஷ்ருதி (அரச சட்ட வைத்திய அதிகாரி) சிவசங்கரன் சச்சிதானந்தன் (Airbus UK / Elisabeth Moiré), Dr. ஷிவாணி (சிங்கப்பூர்), பவானி (வெஸ்டன் ஆஸ்திரேலியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாட்டியும், வேதாந்த்தின் பூட்டியும், அமரர் பாலசுந்தரம் (IBM USA), வள்ளியம்மை, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியும், அமரர் சுப்பிரமணியம், அமரர் சுப்பிரமணியம் (Post Master HPO Colombo) காலஞ் சென்ற Dr. கதிரவேற்பிள்ளை, மந்திகை காலஞ்சென்ற கமலாசினி காலஞ்சென்ற கமலநாதன் (Trade Commisioner SL Mission Malaysia & India), ராணி ஆகியோரின் மைத்துனியும், வேதநாயகி, சிதம்பரராஜன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 25ம் திகதி அக்டோபர் மாதம் மதியம் 12:30 மணிக்கு நடைபெற்று, பின்னர் 2:30 மணியளவில் அன்னாரின் "கன்கொல்லைப்பதி" இல:26, கன்பொல்லை வீதி, நெல்லியடி இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

தகவல்:
பிள்ளைகள்.

+94 77 739 7353

(CR 40829) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 02 . 1949



மறைவு 23 . 10 . 2023

## திரு. கனகசபை கந்தையா

மறவன்புலோ மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கனகசபை கந்தையா நேற்று (23.10.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் க.நாகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கருப்பையா விசாலாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன், காண்டீபன் மற்றும் பிரபாகரன், பிரதாப், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துளசி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர் விபூசனி, இதழினி, இசைப்பிரியா, (மாணவி - மத்தியகல்லூரி கிளிநொச்சி), சோபிதன் (மாணவன்- மத்தியகல்லூரி கிளிநொச்சி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (தறுமு), கணபதிப்பிள்ளை (சிவபுண்ணியம்), அழகராஜா மற்றும் பறுபதம், நடராஜா (ஓய்வுபெற்ற கணக்காளர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2023) செவ்வாய்க்கிழமை மறவன்புலோ மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 12.30 மணியளவில் தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 368 9870

தகவல்
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவலைகள்



## சதாசிவம் தவச்செல்வம்

(உரிமையாளர் செல்வம் கூல்பார் (செல்வம் மாமா - சாவகச்சேரி)

திதி: அபுரபட்ச தசமி

அன்புள்ள அப்பாவிற்கு.......

நாட்கள் பல கடந்தாலும்
மனம் ஏற்க மறுத்து
சிறு பிள்ளை போல்
அடம்பிடிக்கிறது
அப்பா நீங்கள் வேண்டுமென்று

தரையில் போட்ட
மீனைப் போல
துடிக்கிறோம்
எம் அப்பா நீங்கள்
இல்லாத இவ் உலகில்

வாழ்க்கையில் இனி
நினைத்தாலும்
கிடைக்காது - நாம்
உங்களருகில்
இருந்த நாட்கள்

எம் அப்பா - என்று
அழைக்கையிலே
ஆசானும்
வியப்பாரே
பள்ளியிலே

தோழனும் தந்தையும்
இரண்டறக் கலந்த
கவிதை
நீங்கள் - எமக்கு
அப்பா!

சொர்க்கம் தனிலே
சொகுசாய் வளர்த்து
சோதனையில்
விட்டுச் சென்றதும்
ஏனோ.

உழைப்பு என்றால்
உங்களைப் பார்த்துக்
கற்றுக் கொண்டோம்
காசு பணம் - உங்களை
மயக்கவில்லை.

துரோகிகளே வந்தாலும்
வெறுத்து நீங்கள்
ஒதுக்க வில்லையே
யார் புறம் பேசினாலும்
சண்டை போட்டதில்லை

எங்கள் மனம்
வலிக்கும் போது
உங்கள் கண்கள்
கலங்கியதை - நாம்
அறிவோம்.

மீண்டும் வீடு வருவீர்கள்
என்று வைத்தியசாலை
சென்ற போதும் அந்த
மருத்துவம் எல்லாம்
தோற்றுவிட்டதே

உங்களிற்கென
எதுவும் கேட்காத போது
மரணத்தை மட்டும்
கடவுள் பரிபூரணமாக
கொடுத்ததேனோ

அப்பா என்று
நினைத்தாலே
கண்ணீர் வரும் ஊற்றாய்
கதறும் எம் கண்கள்
உங்களை நினைத்து

உலகில் மிகச் சிறந்த
தந்தை - என் தந்தை
என யார் கூறினாலும்
நாங்களும் உரக்கச் சொல்வோம்
என் தந்தை போல்
யாருமில்லை என்று

மறு பிறவி ஒன்று
இருந்தால் மீண்டும்
எங்களிற்கு
அப்பாவாக வேண்டுமென்று
ஏங்குகின்றோம்.

தவப்பேறு 24.02.1954

சிவப்பேறு 24.09.2023

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயதசமியும் அருளுரையும்

யாழ்ப்பாணம், ஒக். 24

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விஜயதசமி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிவகுரு ஆதின பீடமுதல்வர் வேலன் சுவாமிகளின் அருளுரை இடம்பெறும்.

தொடர்ந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்வும் இடம்பெறும். (ய)

## அமைச்சரவை...

ஜனாதிபதியின் இந்த முடிவு தவறானது, அதனை கடுமையாக எதிர்க்கின்றோம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவை அனைத்தும் போலியானவை என்பது இறுதியில் உறுதியானது. மாற்றம் ஒன்று தேவையெனக் கருதி ஜனாதிபதி அந்த மாற்றத்தைச் செய்திருக்கலாம். தொழில் ரீதியாக மருத்துவரான ரமேஷ் பத்திரண திறமையான அமைச்சர், சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற அவருக்கு கட்சியின் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல சிறு கவலையும் உள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளோம். நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்குரிய ஆதரவை எமது கட்சியே வழங்கிவருகின்றது. பெரமுனவின் உறுப்பினர்களே பெரும்பான்மையாக உள்ளனர். சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஐந்து பேரே அரசில் உள்ளனர். இந்தநிலையில் சுதந்திரக் கட்சிக்கு ஓர் அமைச்சு பதவி (மஹிந்த அமரவீர), இராஜாங்க அமைச்சு பதவி (ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய) வழங்கப்பட்டமை தவறான நடவடிக்கையாகும். ஜனாதிபதி தவறிழைத்தாலும் அதனை சுட்டிக்காட்ட தயங்கமாட்டோம். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். இந்த சம்பவத்தால் ஜனாதிபதிக்குரிய ஆதரவை மீளப்பெறுவது குறித்து எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. ஆனால் தமக்கு ஆதரவு வழங்கும் தரப்பை புறக்கணிக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல' என்றார். (அ-ம44)

## சரக்கு ரயில் மோதியதில் வயோதிபப் பெண் சாவு!

கண்டியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த சரக்கு ரயிலில் மோதுண்டு வயோதிபப் மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 80 வயதுடைய பெண்ணே பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர். (ச)




"Ammanai Saran Adainthal Athika Varamperalam"
SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5 Chapel Road, London W13 9AE.
Phone: 0208 810 0835
Founded:10-08-1991 Charity No:1014409
www.ammanealing.org Email:info@ammanealing.org











எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.
தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.


REF:SKTAT / 25 / 10 / 23

பணிநிலை 1 ஆலய சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)
தகைமைகள் : விண்ணப்பதாரி ஆலய குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
கடமைகள் : ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல

பணிநிலை 2 ஆலய சிவாச்சாரியார் நெய்வேத்தியம் செய்பணி (Preparing Prasadham Food, Non-pastoral role)
தகைமைகள் : ஆலய சிவாச்சாரியாராக மடப்பள்ளியில் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்
கடமைகள் : ஆலய நெய்வேத்தியம் செய்தல் வேண்டும்

பணிநிலை 3 ஆலய சுவாமிகளுக்கு பூமாலை கட்டுதல் சுவாமிகளுக்கு அலங்காரம் செய்தல் (Stringing garlands, decorating & dressing Idols, Non-pastoral role )
தகைமைகள் : ஆலய சிவாச்சாரியாராக மடப்பள்ளியில் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்
கடமைகள் : ஆலய சுவாமிகளுக்கு பூமாலை கட்டுதல் சுவாமிகளுக்கு அலங்காரம் செய்தல்
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 20-11-2023
(cs.52592).(N.1)
ஆலய நிர்வாகம்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு மீசாலை சைனிங் ஸ்டார் லேணிங் சென்ரரின் ஏற்பாட்டில் முன்பள்ளி மாணவர்களுக்கான கோலம் போடும் போட்டி அண்மையில் இடம் பெற்றது. (ச-100)


ஒன்பதாவது ஆண்டு ஈரவிழி அஞ்சலிகள்

ஜனார்த்தனன் அச்சுதன்

திதி: விஜயதசமி
(24.10.2023 செவ்வாய்க்கிழமை)



எண்ணிய பொழுதெல்லாம்
கண்ணீரில் நீர் கசிகின்றதே
உணர்வால் உள்ளத்தால் வாழும் தெய்வமாகி
எம் இதயங்களில் வாழ்கின்றீர்.

கோகிலமகா புடைவையகம்
22, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
பிரிவால் துயருறும் அப்பா(ஜனார்த்தனன்), அம்மா(சிவமலர்), குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் மனோகரன்



மண்ணில் 06.12.1941 விண்ணில் 23.10.2023

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும், ஆனந்த கதிரமலை, ஆனந்த குமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தமணி மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், முருகதாஸ், சுமதி, தயானந்தன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மப்பிரபா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிஸின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கதிரமலை வாசம்'
புலோலி மேற்கு, கிராமக்கோடு.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் - முருகதாஸ்
மகள் - சுமதி
பெறாமகன் தயானந்தன்
077 344 3034



## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 11 . 1963

இறப்பு 23 . 10 . 2023

### மாணிக்கம் குணசேகரன்

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குணசேகரன் நேற்று (23.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர் துரை பத்மாவதியின் மருமகனும், உஷாராணியின் அன்புக் கணவரும், பானுஷா, கிறுாயன், அகல்யா, யதூஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராசா (வயறிங் செல்வம்), விஜயராணி, கலாராணி, இந்திராணி, தேவராணி, உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26704) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவையில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவை மறுசீரமைப்பு நேற்று முற்பகல் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பெருந்தோட்டத்துறை மற்றும் கைத்தொழில் அமைச்சராக செயற்பட்ட ரமேஷ்பத்திரணவிடம், சுகாதார அமைச்சு பதவி கையளிக்கப்பட்டுள்ளது. ரமேஷ் பத்திரணவிடமிருந்து பெருந்தோட்ட துறை கழற்றப்பட்டு, விவசாயத்துறை அமைச்சராக செயற்படும் மஹிந்த அமரவீரவிடம், மேலதிக விடயதானமாக அந்த அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலமீது எதிரணிகளும், சுகாதாரம்சார் தொழிற்சங்கங்களும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வந்தன. சுகாதாரத்துறை வீழ்ச்சியடைவதற்கு அவரே காரணம் எனவும் சுட்டிக்காட்டின.

இதற்கிடையில் சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் முன்வைக்கப்பட்டது. எனினும், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது அது தோற்கடிக்கப்பட்டது. ஆனாலும் கெஹலியவுக்கு எதிரான எதிர்ப்பு குறையவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவரிடமிருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டுள்ளது.

நஷீர் அஹமட் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்ததால் சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் கீழ் சென்றது. அந்த அமைச்சே தற்போது கெஹலியவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரஞ்சித் சியம்பலாபிட்டிய, நிதி இராஜாங்க அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக தோட்டத் தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இந்தப்பதவியேற்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (அ-ம-44)

## சுகாதாரப்...

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் அதிகரித்து வழங்கப்படவேண்டும் என்றும், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை மேற்பார்வை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை திரும்பப்பெற வலியுறுத்தியும், ஊதிய உயர்வு வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த சுகவீனப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். சில இடங்களில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-213)

## காணியை...

பாண்டியன்குளம் சந்தியிலிருந்து பேரணியாக புறப்பட்ட கிராம மக்கள், மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ரவிகரன், சிவமோகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதியாக பிரதேச செயலகத்தில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (அ-ம-19)

## கண்கட்டி வித்தையே...

அரசு முழுமையாக மாறவேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலையிடிக்கு தலையணையை மாற்றும் கதையாகவே அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெற்றுள்ளது. இதெல்லாம் கண்கட்டி வித்தையாகும். அரசுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு வலுத்துவரும் நிலையில், இதோ சுகாதார அமைச்சை மாற்றிவிட்டோம் எனக் காண்பித்து அந்த எதிர்ப்பலையை திசை திருப்புவதற்கான முயற்சியும் இடம்பெறுகின்றது. தீர்வு இது அல்ல. இந்த அரசு முழுமையாக மாறவேண்டும். அதற்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும்'- என்றார். (அ-ம-44)

## இளம்...

காணாமற்போன பெண்ணின் தாயாரால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

எனது மகளும், மருமகனும் தனியாக வசித்து வந்தார்கள். தொலைபேசியில் உரையாடிவந்த மகள் கடந்த 21ஆம் திகதிக்குப் பின்னர் உரையாடவில்லை. அவருடைய அலைபேசியைத் தொடர்புகொள்ள முடியவில்லை. இதையடுத்து அவர்கள் குடியிருந்த வீட்டுக்குச் சென்று பார்த்தபோது மகளையும், அவருடைய கணவரையும் அங்கு காணவில்லை என்று அந்தத் தாயார் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-19)

## மூன்று...

யொன்று தயாரிக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்கட்டணத் திருத்தத்துக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் கடந்த வாரம் மின்சாரசபைக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, ஒக்ரோபர் 21ஆம் திகதி முதல், எதிர்வரும் சில மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை சுமார் 18 வீதத்தால் அதிகரித்துள்ளோம். சர்வதேச நாணயநிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இந்தக் கட்டண மறுசீரமைப்புத் தொடர்பில் அரசாங்கம் கொள்கை ரீதியான முடிவை எட்டியது. எந்தவொரு அரச நிறுவனமும் திறைசேரியின் ஊடாகப் பணத்தைப் பெற்று அதன் நட்டத்தை ஈடுகட்ட முடியாது. அதன்படியே, மின்சாரசபைக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் விசேட விலைச்சூத்திரம் தயாரிக்கப்பட்டது.

மின்சாரசபை மின்கட்டணத்தை ஒரு வருடத்தில் இரண்டு முறை மட்டுமே திருத்தம் செய்யமுடியும் என்ற தவறான கருத்து மக்கள் மத்தியில் உள்ளது. ஆனால், அவசர நிலைமையில் மின் கட்டணத் திருத்தத்தைக் கோரும் உரிமை மின்சாரசபைக்கு உள்ளது. அதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த முறையைப் பயன்படுத்தியே இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரசபை மறுசீரமைப்பு தொடர்பான சட்ட வரைவு, சட்ட வரைஞர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் அலுவலகம் அதனை ஆய்வு செய்த பின்னர் [illegible] அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது. அதற்கான பணிகளை இந்த வாரத்தில் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை சட்டமா அதிபர் எனக்கு அறிவித்தார். அதன் பின்னர் அடுத்த வாரம் மறுசீரமைப்பு குறித்த சட்டவரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (அ-ம)

## கொத்தலாவலயின்...

தாகவும், முறையான உடற்கூற்றுப் பரிசோதனைகளை நடத்துமாறும் லலித் கொத்தலாவலயின் குடும்பத்தினர் கொழும்பு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாக லலித் கொத்தலாவல அவரது குடும்பத்தினர்கூட அணுக முடியாதவாறு சிலரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரது சொத்துகளைக் கைமாற்றும் நோக்குடனேயே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனவே அவரது மரணத்தில் எமக்குச் சந்தேகம் உள்ளது என லலித் கொத்தலாவலயின் குடும்பத்தினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். இவர்களின் மனுக்களைப் பரிசீலித்த நீதிமன்றம் உடற்கூற்றுப் பரிசோதனையை உரியமுறையில் முன்னெடுத்து, அதன் பின்னர் சடலத்தை கொத்தலாவலவின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (அ-ம-6)

## காவாலித்தனம்...

குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைக்குப் பின்னர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது, சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அண்மையில் ஒன்றுகூடி தங்களில் ஒருவரின் பிறந்தநாளை 'கேக்' வெட்டி கொண்டாடியுள்ளனர். அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடியவர்களின் செயற்பாடானது வீதியில் சென்றவர்கள் மற்றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஏழுபேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் குழுவின் பிரதான சந்தேகநபரே நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

## இ.போ.ச...

நேற்றுமுன்தினம் காலை ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்தை வழிமறித்துச் சோதனை செய்தபோது மேற்படி சாரதி மது அருந்தியிருந்தமை தெரியவந்தது. அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு நேற்று அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்கு ரத்துச் செய்யப்பட்டது. (அ-ம-125)

## பலஸ்தீன...

யிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக்குண்டுகள், மனிதாபிமானப் பகுதிகள் என அனைத்தையும் 2009 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் இலங்கையின் இனவெறி அரசாங்கம் பயன்படுத்தியது. ஆதலால், இனவெறி இஸ்ரேலிய அரசாங்கம் தனக்கு ஆதரவளிக்கும் மேற்குலக நாடுகளின் உதவியுடன் இவ்வாறான ஆயுதங்களை பலஸ்தீன மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதை நாங்கள் அச்சத்துடன் பார்த்தவண்ணம் உள்ளோம்.

இலங்கையின் அரசியலில் ஆதிக்கம் செலுத்திவரும் சிங்கள - பௌத்த பேரினவாதம் பலஸ்தீனத்தின் சியோனிஸ்ட் குடியேற்றத் திட்டம் போன்றதல்ல. எனினும் பல ஒற்றுமைகள் உள்ளன. விளைவுகளும் ஒரேமாதிரியானவையாக உள்ளன.

1948ஆம் ஆண்டு முதல் இஸ்ரேலிய அரசாங்கம்பலஸ்தீனர்களுக்கு இழைத்த துயரங்களுக்கு இரங்கல் தெரிவிக்கிறோம். பலஸ்தீனியர்கள் தற்போது அனுபவிப்பது ஈழத்தமிழர்கள் பகிர்ந்துகொள்ளும் நீடித்த வலி.

நாங்கள் இலங்கை, இஸ்ரேல், அவுஸ்திரேலிய ஆகிய நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வன்முறைகளில் ஈடுபடுவதை பார்க்கின்றோம். இந்த அரசுகள் பூர்வீக நிலங்களை அபகரிப்பதை சட்டபூர்வமாக்குகின்றன. சுயநிர்ணய உரிமையை இழந்த மக்களை இனப்படுகொலை செய்ய உதவுகின்றன - என்றுள்ளது. (அ-ம)

## 117 குழந்தைகள்...

உயிரிழந்துள்ளன. இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாக வடக்கு காஸாவில் இஸ்ரேல் கடும் வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. பாதுகாப்பு வலயங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள்ளும் இஸ்ரேலின் தீவிரமான தாக்குதல்கள் அரக்கத்தனமாகத் தொடர்கின்றன. மருத்துவமனைகள், பாடசாலைகள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசி வருகின்றன. கடந்த 24 மணிநேரத்தில் (இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நண்பகல் தொடக்கம் நேற்று நண்பகல் வரை) இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 117 குழந்தைகள் பரிதாபச் சாவடைந்துள்ளன. (அ-ம)

## அமைச்சரவை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஸ்மார்ட்' நாட்டை உருவாக்குவதாக ஜனாதிபதி கூறினாலும் 'ஜில்மாட்' நாட்டை உருவாக்குவதுதான் நடந்து வருகின்றது. ஜனாதிபதி உருவாக்க முயற்சிக்கும் 'ஸ்மார்ட்' நாட்டின் வடிவம் இதுதானா என்று நாம் கேள்வி எழுப்புகிறோம்.

மாற்றத்தை தன்னில் இருந்து ஆரம்பிப்பதாக கூறிய ஜனாதிபதி காண்பித்துள்ள வேடிக்கையான முன்னுதாரணம் புதுமையானதாகும். சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெலவின் செயற்பாடுகள் தோல்வியடைந்ததால், நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தபோது, அவரை அரசு பாதுகாத்தது.

சட்டவிரோதமான முறையில் மின்கட்டணத்தை அதிகரித்து, சுகாதாரத்துறை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை அழிவுக்கு இட்டுச்சென்று, தனது அதிகாரத்தை பாதுகாத்துக்கொள்ள, வெட்கக்கேடான செயல்களில் ஈடுபட்ட இந்த அரசு அரங்கேற்றும் வேடிக்கையான இந்த நாடகங்களையும் அரசியல் சூதாட்டங்களையும் நாட்டு மக்கள் இனிமேலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிக ளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். லாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு

**கன்னி:** புதிய முயற்சிகளை கா மேற்கொள் வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் உண்டாகும். தொல்லைகளைச்

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகு எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

# கஜனாவைநிரப்புவதற்கே அமைச்சர் டக்ளஸ் முயற்சி

### இலங்கைத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.23

தனது கஜனவை நிரப்புவதற்காகவே டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக செயற்படுகின்றார் என அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி சுப்பிரமணியம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது நாட்டில் கடற்றொழில் தொடர்பான சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்திருத்தத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்திருத்தம் மூலம் தொடர்பாக மக்களை ஏமாற்றும் விதமாக ஒரு கலந்துரையாடல் நடந்துள்ளது. கடற்றொழிலுக்கு சம்பந்தமில்லாதவர்கள் ஒரு கட்சியின் பிரதிநிதிகள் அந்தக் கலந்துரையாடலுக்கு மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்தச் சட்டத்தின் ஊடாக வெளிநாட்டு மீனவர்களையும் தொழில் செய்ய அனுமதிக்கலாம். அதனால் இந்தச் சட்டத்திருத்தத்தைத் தவிர்த்து, ஏற்கனவே 1996 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தைத் திருத்தி 2017 ஆம் ஆண்டு இழுவைமடிச் சட்டத்தையும் உள்ளீர்த்து மீனவ நலனைப் பேணும் ஆக்கபூர்வமான சட்டமாக மாற்றவேண்டும்.

கடற்றொழில் அமைச்சர் தொடர்ச்சியாக தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார். அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இவர் செயற்படவில்லை . இந்தப் பேச்சில் கடற்றொழில் அமைச்சரின் கபட நாடகமே இந்தப் பேச்சாகும்.

வடபுலத்து மீனவர்களாகிய நாம் எமது கடல் வளம் பறிபோகும் சந்தர்ப் பத்தில் அதற்கு எதிராக நிச்சயமாக கிளர்ந்து எழுவோம் - என்றார். (ஏ-125)

# நாடாளுமன்றின் கௌரவத்தை காப்பாற்றவேண்டும் சபாநாயகர்

### சம்பிக்க வலியுறுத்து

நாடாளுமன்றத்துக்கு தீ வைக்க வேண்டும். 225 உறுப்பினர்களை விரட்டியடிக்க வேண்டும் என இளைஞர்கள் குறிப்பிடுவதை நியாயப் படுத்தும் வகையில் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள். நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க சபாநாயகர் பொறுப்புடன், கடுமையாகச் செயற்படவேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தொடர்பில் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டை நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்துள்ளார்கள். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தக்க பதிலடி கொடுப்பார்கள். நாட்டு மக்களும் அரசியல் ரீதியில் இனிவரும் காலங்களில் மாறுபட்ட தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு தீ வைக்க வேண்டும், 225 உறுப்பினர்களையும் விரட்டியடிக்கவேண்டும் என்ற எதிர்ப்பு கடந்த ஆண்டு தோற்றம் பெற்றது. இளைஞர்கள் மத்தியில் இந்த நிலைப்பாடு காணப்படுகிறது. நாடாளுமன்றம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள தவறான நிலைப் பாட்டை நியாயப்படுத்தும் வகையில் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெறுக்கத்தக்க வகையில் செயற்படுகிறார்கள்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க ஒருசில நேரங்களில் கடுமையான தீர்மானங்களை எடுத்தார். ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு என்று பாரபட்சமில்லாமல் நடுநிலையாகச் செயற்பட்டார். தற்போதைய நாடாளுமன்றம் தொடர்பாக மக்கள் மத்தியில் நல்ல தொரு நிலைப்பாடு கிடையாது. அதனால் சபாநாயகர் கடுமையாகவும், பொறுப்புடனும் செயற்படவேண்டும் - என்றார். (ஏ-இ)

10 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

# 5000 அதிபர்களுக்கு நவம்பரில் நியமனம்

### கல்வி இராஜாங்கஅமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.24

சுமார் 5 ஆயிரம் அதிபர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் மாதம் கையளிக்கப்படவுள்ளன என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று தரங்களிலும் சுமார் 5000 அதிபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர். அவர்களின் நியமனக்கடிதங்களை எதிர்வரும் மாதம் 4ஆம் திகதி வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம். அதே வேளை, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களின் ஊதியத்தையும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ச)

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* நிலப்பரப்பு
* 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 0760 389

(CS 26653) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.